# மாண்டிசொரி மாணவனின் சுதந்திரமும்-ஒழுக்கமும்.

அன்பர்களே!
கண்ணன் பகவத்கீதையில் முக்தி என்றால் எதைச் சொல்கிறான் தெரியுமா?
‘‘ சதந்திரமான எண்ணமே,வாழ்வே முக்தி ஆகும் ’’ என்கிறான்.

*சுதந்திரமான வாழ்க்கையை எவரும் தட்டிக் கேட்பதில்லை என்ற ஒரு காரணம் தானே நம்மைப் பல மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றுவாழத் தூண்டுகிறது?ஆனால் இந்த சுதந்திர வாழ்க்கை என்பது கட்டுப்பாடற்ற வாழ்க்கை இல்லை.சுயபுத்தியும்,ஒழுக்கமும்,பகுத்தறிவும் கூடிய அற்புதமான வாழ்க்கையே உண்மையான சுதந்திரம் என்பது மாண்டிசொரி அம்மையாரின் கருத்து ஆகும்.

இன்று ஒழுக்கம் என்றால் என்ன?பெரியவர்களுக்குக் கட்டுப்படுவதா? சொன்ன பேச்சைக் கேட்பதா? பயபக்தியா?

*ஒருகாலத்தில் குடிப் பழக்கம் மிகவும் ஒழுக்கக்கேடு என்று பார்த்த நிலை மாறி,இன்று உயர்குடி மக்களில் நவநாகரீகப் பொழுதுபோக்கு என்றாகிவிட்டது.பாருங்கள்,சமுதாயத்தின் ஒழுக்கத்தினை வரையரை செய்யும் பெரியவர்களே குழம்பியுள்ளோம்.

மாண்டிசொரி ஒழுக்கத்தைப் பற்றி என்ன சொல்கிறார் பார்ப்போமா?

‘‘ ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் பிறவியிலேயே உயர்ந்த ஒழுக்கம் மரபியல் ரீதியாக அமைந்துள்ளது.எந்த மனிதனும் ஒழுங்கீனமாக இருக்க விரும்புவதில்லை.சூழ்நிலையும்,தன்னைச் சுற்றியுள்ள மக்களின் வழிகாட்டலுமே அவனை நன்மை--தீமைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது.வயதுக்கு உரிய ஓட்டமும்,நடையும்,விளையாட்டும்,பேச்சும்,கேலியும் ஒழுங்கீனம் ஆகாது.

ஒரு பிள்ளை என்னிடம் குரலை உயர்த்திப் பேசுகிறான்.முதலில் நான் டென்ஷன் ஆக மாட்டேன்.அமைதியாக அவனைப் பேசவிட்டுவிடுவேன்.பின் நான் கூறுவதைப் பாருங்கள்.
‘‘ ஹலோ! மை பாய்.உன் தரப்பில் உன் விசயங்களைக் கூற உனக்கு என்றும் சுதந்திரம் உண்டு.ஆனால் அதை இப்படிக் குரலை உயர்த்திப் பேச வேண்டும் என்பதற்கு யார் உனக்கு சுதந்திரம் அளித்தது?உன் ப்ரச்சனைகளை நான் கையாள்கிறேன்,ஆனால் இனி உன் குரல் கோபத்தினால் சத்தமாகக் கூடாது.அதனால் உனக்கும் நல்லது அல்ல...’’

அவன் அடுத்தமுறை எவ்விடத்திலும் ஆவேசப்படுவதில்லை.இது உண்மை,வெறும் கதையில்லை.

**தனக்குக் தெரியும் எது தவறு என்று:**

தன் சட்டையை அழுக்காக்கிக் கொண்ட சிறுவன் அம்மாவைப் பார்க்க பயப்படுவதன் காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?பயம் என்பதைவிட தான் தன் சுத்தமான அழகான சட்டையை அசிங்கமாக்கிக் கொண்டோமே என்ற கவலை தான் அவனுள் அதிகம் உள்ளது.இதை நம்பினால் நம்புங்கள்.
அப்போது,உங்கள் கோபத்தினைக் காட்டலாம்.பின்வருமாறு,

*‘‘சாரி,உன் சட்டை அழுக்கானதில் அம்மா மிகவும் வருத்தப் படுகிறேன்’’
*‘‘மண்ணில் விளையாட உனக்கு முழுச்சுதந்திரம் உண்டு.ஆனால்,இன்று இந்த அழகான சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு விளையாடி இருக்க வேண்டும்!’’

*``சரி சரி,வா அடுத்த சில விழாக்களில் உன் இஷ்ட்டப்படி நீ உடை அணியும் உரிமையை விட்டுத்தர வேண்டும்!``[இதுவல்லவா பெஸ்ட் தண்டனை?]

என்ன சார் விளையாடறீங்களா?என்று கோபம் கொள்ள வேண்டாம்!இத்தனை பக்குவத்துடன் தான் மாண்டிசொரி பிள்ளைகள் முழுமையான ஒழுக்கதிற்குப் பள்ளிகளில் தயார் ஆகிறார்கள்.இத்தனை பொறுமை ஆசியர்கள் பலருக்கும் உண்டு.

எனவே ஒழுக்கம் என்பது மிலிட்டரி ரூல் அல்ல.அது நிலையில்லாதது.அண்ணல் காந்தியடிகள் பள்ளிப் பருவத்தில் பல தவறுகள் செய்தார்.அவற்றைத் திருத்திக் கொள்ளும் வாய்ப்பை எப்படி பெற்றார்?அவர் பெற்றோர்களின் அன்பான கண்டிப்பால் தான்.அவரது அஹிம்சா கொள்கை அவரது பெற்றோர்களால் தூண்டப் பட்டது என்பது என் கருத்து.

மாண்டிசொரி,பிள்ளைகளுக்குச் சுதந்திரம் தரக் கூறுகிறார்.அதுவே அவரது கல்வியின் உயிர்நாடி என்பேன்.ஆனால் அச்சுதந்திரம் மெதுவாக,பக்குவமாகத் தரப்பட்டு,அதைக் கையாள்வதில் மாணவனுக்குப் பயிற்சியும் தரப் படவேண்டும்.

சுதந்திரத்தினை மாணவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு,தவறாக அனுபவித்தாலதன் பொறுப்பு நமதே.ஆனால் அச்சுதந்திரத்தினைத் தற்காலிகமாக விலக்கும் கடமையும் நமதே.மாண்டிசொரி கூறு ``சுதந்திரம்`` என்பது குழந்தைகளைக் கண்டு கொள்ளாமல் அவர்கள் எண்ணியபடி போக விடுதல் என்று தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம்.ஒரு மாண்டிசொரி வகுப்பில்,மாணவர்கள் தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் எந்த வேலையை வேண்டுமானாலும் எடுத்துச் செய்வார்கள்.ஆனால் வெறுமனே காலத்தினை வீணாக்க ஆசிரியர்கள் விடமாட்டார்கள்.ஏன் என்றால்,வெறுமனே எவ்வித வேலையும் செய்யாமல் உடலும் மனமும் இருக்கும் போது தான் தேவையற்ற குறும்புகளும்,பிறரைச் சீண்டித் தொல்லை செய்யும் னனோபாவமும் வருகிறது என்கிறார் மாண்டிசொரி.

வகுப்பில் மாணவர்கள் சதா வேலைகளில் முழு ஈடுபாட்டுடன் இருக்கும் போது,அங்கே அமைதியும்,சில வேளைகளில் மெதுவான பேச்சு ஒலியும்[இதை லேர்னிங் நாய்ஸ் லெவல் என்பர்] இருக்கும்.ஆனால் அதே ஒலி மற்றவர்களைத் தொல்லை செய்யும் ``சத்தமாக`` மாறும் வேளையில் ஆசிரியர்கள் முன்வந்து கட்டுப்படுத்துவர்.

உதாரணம்:மாண்டிசொரி வகுப்பறையில் மாணவன் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்,அமரலாம்.ஆனால் அவனது அசைவுகள் மற்ற மாணவர்களுக்குத் தொல்லை தரக்கூடாது.கல்விச்சாதனங்கள் எவற்றை வேண்டுமானாலும் எடுத்து வேலை செய்யலாம்,ஆனால் அதை எப்படிக் கையாள்வது என்று தெரிந்து கொள்ளாமல் அச்சாதனத்தினைத் தொட அனுமதியில்லை.

அதே வேளையில் அவன் வேறு ஒரு மாணவன் வைத்திருக்கும் சாதனத்தினைக் கேட்டு அடம் பிடிக்க அனுமதி தரப்படுவதில்லை.பிறர் வைத்திருக்கும் பொருள் தன்னிடம் வரும் வரை அவன் பொறுமையுடன் இருக்க வேண்டும்.இதுவன்றோ இன்று மனிதனுக்கு மிகவும் அவசியமான பண்பு?அதே வேளையில் அப்பொருள் தன்னிடம் அரும் வரை அவன் காலத்தினை வீணாக்காமல் வேறு வேலை செய்யவும் ஆசிரியர்கள் வழிநடத்துவர்.

**நமது குரலே வழிகாட்டி:**

முன்பு கூறியது போல் ஒருபோதும் ஆசிரியர்கள் குரலைக் கோபமாகவும் மனம் புண் படும் படியும் உயர்த்த மாட்டார்கள்.ஆனால் குரலில் தேவையான கண்டனம் அவசியம் பொதிந்து இருக்கும்.

‘‘இதைச் செய்யாதே, அதைத் தொடாதே,வேண்டாம்’’ போன்ற சொற்களைவிட ‘‘இதை இப்படிச் செய்’’ என்று கூறிப் பாருங்கள்.

உதாரணம்:பேப்பர்களை சதா வீணாக்கும் மாணவன் ஒருவனைப் பார்த்து,’’சாரி,காகிதம்,மரங்களின் அழிவு,காடுகளின் அழிவு எனப் பலபடப் படிக்கிறாய்,இப்படிச் செய்வது பற்றி யோசி!’’ என்றேன்.அவன் என்னிடம் பலர் வீசிய பேப்பர்களை எடுத்துவந்து கொடுத்தான்.

பெற்றோர்களே!உங்கள் பிள்ளை எவ்விதத்திலும் சளைத்தவன் இல்லை என்று முதலில் நம்புங்கள்.ஆனால் அதுவே ஆணவமாகிவிடக் கூடாது.
பிள்ளையின் சுதந்திரம் என்பது,
*தான் நினைத்ததை உங்களிடம் பயப்படாமல் அமைதியாகக் கூறுவது.
*தனக்குத் தேவையானதை உங்கள் அனுமதியுடன் செய்வது.அவன் வேண்டும்பொருளோ,விளையாட்டோ அல்லது எதுவானாலும் ஏற்பதற்கு இல்லை என்றால்,அமைதியுடனும்,அன்புடனும் எடுத்துக் கூறி மறுக்கப்பட வேண்டுமே ஒழிய அடக்குமுறையைக் கையாளாதீர்கள்.
*தனது வயதுக்கும்,உடலமைப்பிற்கும் தகுந்த வேலைகளில் ஈடுபடுவது.
*அதற்குரிய பொருள்களையும்,காலத்தினையும்,அனுமதியையும் நீங்கள் வீட்டிலும் பள்ளியிலும் ஏற்படுத்தித் தருதல் அவசியம்.
*தனக்கு வேண்டிய அன்றாட வேலைகளைத் தானே தன்னிச்சையுடன் செய்து கொள்ளுதல்.குழந்தை தன் சட்டை பட்டனைத் தானே போட்டுக் கொள்ள முயலும் போது அதற்கு அவகாசம் தாருங்கள்,அற்றுக் கொடுங்கள்.,கத்தாதீர்கள்.குழந்தையின் உடல் உருவத்தினை வைத்து,அவனுக்கு எல்லா சிஷ்ருதைகளையும் நீங்களே செய்து அன்பால்,பாசத்தால்,செல்லத்தினால்...உங்களைச் சார்ந்தே இருக்கப் பழக்கி விடாதீர்கள்.அவன் தட்டை அவனே எடுத்து வரட்டுமே?
‘‘ என் மகள் நான் எந்த வேலை செய்தாலும் கூடவே வந்து தொல்லை செய்வாள்,அதான் பாட்டியிடன் விட்டு விட்டேன் ’’ என்றார் ஒரு பெண்.அவர் பாவம் தன் மகள் தனக்குரிய வேலையைக் கேட்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை.

உதாரணம்:என் நண்பன் ஒருவன் கிராமவாசி.அவனுடை இரண்டு வயது மகளுக்கு உரிய வேலைகளைக் கூறினேன்.இப்போது அவள் அமைதியாக அம்மாவுடன் அவள் வயதிற்கு ஏற்ப காய்களைப் பிரிக்கிறாள்,உருளைக் கிழங்குத் தோலை உரிக்கிறாள்,கர்ச்சீப்புக்கு குட்டி சோப் போட்டுக் கசக்கித் தருகிறாள்.மெதுவாகத் தன் ஆடைகளைப் பிரித்துத் தானே அலமாரியில் வைக்கிறாள்,அம்மாவால் ஓய்வுடனும் அமைதியுடனும் மேலும் பல வீட்டுக் காரியங்களைப் பார்க்க முடிகிறது.

*உங்கள் பிள்ளையின் உடலுக்கு ஏற்ப சிறு சாமானங்களைத் தந்து வேலைகளில் ஈடுபட வையுங்கள். அதனால் தான் மாண்டிசொரிப் பள்ளிகளில் வீட்டில் உள்ள பல தேவையான பொருள்கள் சிறிய வடிவில் இருக்கும்.அன்றாட வாழ்க்கைத் தேவைகளை ‘‘இ.பி.எல்’’ என்பர்.இந்த இ.பி.எல் வேலைகளை முறையாக ஒரு பிள்ளை முடிக்கும் போது மனதால்,செயலால்,சுதந்திரம் காண்கிறது.

உதாரணம்:என் மாணவர்கள் தங்கள் செருப்புகளை,டிபன் கேரியர்களை,பைகளை அவர்களாகவே பள்ளியிலும் வீட்டிலும் உரிய இடத்தில் வைப்பர்.உணவு உண்டபின் ஆயாவுக்காக அவர்கள் காத்திருக்காமல் தாங்களே அவ்விடத்தினை சுத்தம் செய்துவிடுவர்.தினமும் பள்ளி முடியும் வேளையில் தாங்களே வகுப்பைக் கூட்டித் துடைத்து விடுவர்.அவர்கள் வயது என்ன தெரியுமா?............மூன்று முதல் ஆறு தானப்பா!!!!!!

அறிவியல் ரீதியாகப் பார்த்தால்,ஒரு குழந்தையின் ஒழுக்கம் என்பது பெரியவர்களின் நடவடிக்கைகளையும்,பள்ளி----வீட்டின் ஒழுங்கமைப்பினையும் வைத்தே முழுமை

அடைகிறது என்பது மாண்டிசொரியின் முடிவு ஆகும்.இதை நான் அனுபவப் பூர்வமாக உணர்ந்து எழுதுகிறேன்.

உதாரணம்:நான் எத்தனை வருட அனுபவசாலியானாலும் சரி,நான் எப்படி என் வகுப்பினையும்,என் நடவடிக்கைகளையும் முறையாக அமைத்துக் கொள்கிறேனோ அப்படியே என் மாணவர்கள் இருப்பர்.இது ஒரு நாள் காரியமில்லை.ஒவ்வொரு நாளும் எனக்குப் புதிய நாளே.

**வயதுக்கு ஏற்ற வேலையும் ஒழுக்கமும்:**

உங்கள் பிள்ளைக்குள் உள்ள வயதுக்கு ஏற்ற வேகம்,தாகம்,அறிவுப்பசி இவற்றை முறைப்படி பூர்த்தி செய்துவிட்டால் சுயவொழுக்கமும் பொறுப்புணர்வும் அவனுள் வளர ஆரம்பித்துவிடும். உதாரணங்கள்:

&.இரண்டு வயதுக் குழந்தை ஒன்றை என் தோழியின் பள்ளியில் சேர்க்க வந்தார்கள்.என் தோழிக்கோ அதில் தயக்கம்.இரண்டு வயதில் எப்படி அடங்கி வேலை செய்யும் என்ற சந்தேகம் வேறு.என்ன நடந்தது தெரியுமா?

அக்குழந்தை வரும் போது மற்ற பிள்ளைகள் துளசிச் செடியை ஒரு அழகான தொட்டியில் நட்டு,காவி பூசி,அலங்காரம் செய்து கொண்டிருந்தனர்.இந்தக் குழந்தை அங்கே சென்றது,கையில் பெயின்டிங் பெர்ஷ்ஷை எடுத்தது........நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் பெயின்டிங் வேலையை யாருடைய உதவி இன்றியும் தன்னிச்சையாகச் செய்து விட்டது.பாருங்கள் இரண்டு வயதுக் குழந்தையின் கவனத்தை,வேலை நேரத்தை.முறையாக வடிவமைக்கப் பட்ட சாதனங்களும் ,வேலைகளும் குழந்தைகளின் மூளையை அதீத கவனத்திற்கு எடுத்துச் செல்கின்றன என்கிறார் மாண்டிசொரி.அதுமட்டுமல்ல., ஒரு வேலையை அவர்கள் திருப்பித் திருப்பிச் செய்வதால் அவர்களின் கவனம்,உடல் வளர்ச்சி,திறன்,அறிவுவளர்ச்சி என அனைத்தும் வளர்ச்சி அடைகிறது என்பதே மாண்டிசொரியின் அறிவியல் பூர்வமான கருத்து.இதை அப்படியே பள்ளிகளில் காணலாம்.மாண்டிசொரி மாணவர்கள் வீட்டிலும் பெரும்பாலும் அப்படியே வாழ்கின்றனர்.

&இன்னொரு சுவையான அனுபவத்தைப் பகிர்கிறேன்.
கொரியாவில் இருந்து ஒரு ஆறு வயது மாணவன் என் பள்ளியில் சேர்ந்தான்.அவனுக்கு மாண்டிசொரி அமைப்பு புதிது.அப்பப்பா....!!!அவன் குறும்புகளைச் சொல்லி மாளாது.அவனை எப்படி வழிப்படுத்துவது என்று பல வகையில் திட்டமிட்டோம்.ஒவ்வொரு செவ்வாயும் பத்து வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மரச் சாமானங்கள் செய்யும் பயிற்சி வகுப்பு நடைபெறும்.ஒரு நாள் இக்குறும்பன் உள்ளே வந்தான்.நான் அனுமதித்தேன்,ஏனெனில் அவன் எங்கு செல்லவும் சுதந்திரம் உண்டு.என் அனுமதியும் பெற்றான்.சற்று நேரம் கழித்து என்னிடம் வந்து,'' சார்,நானும் இந்த வேலையைச் செய்யட்டுமா?'' என்றான்.

சில சட்டதிட்டங்களைக் கூறினேன்.பயிற்சியாளரிடம் அவனை அனுப்பினேன்,அமைதியாக அமர்ந்து தன் மரத்துண்டில் சேலையை ஆரம்பித்தான்.அமைதியாக,மற்றவர்களைத் தொல்லை செய்யாமல் வேலை செய்தான்.மேலும் தொடர்ந்து பல வகுப்புகள் வந்தான்.கடைசியில் அழகான அவன் நிலைக்கு ஏற்ற ஒரு கார் மாதிரியைச் செதுக்கி இருந்தான்.எல்லாரும் வியந்தனர்.நான் இதில் ஒன்றுமே செய்யவில்லை.வெறுமனே அவனை கவனித்துக் கொண்டேன்.

அவனுடைய அறிவுப பசி தீர்க்கும் வேலைகளும்,செயல்பாடுகளும் அவனுக்குத் தரப்பட்டபோது அவன் அமைதியானான்.இதைத்தான் மாண்டிசொரி'' அறிவு தாகம்'' என்பார்.

எனதருமை நண்பர்களே!ஒன்றை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்!
எந்த ஒரு விஷயத்தினையும் வலுக்கட்டாயமாக்கினால் அது குழந்தைகளின் இயற்கையான அறிவு வளர்ச்சியை முடக்கிவிடும்.அதே வேளையில் எந்த நேரத்தில் கண்டிப்பும்,அறிவுரையும்,வழிகாட்டலும் தேவையோ அப்போது அதைச் செய்யவும் வேண்டும்.ஏன் என்றால் மனிதன் உயர்ந்த நிலையை அடைவது அவ்வளவு சுலபமில்லையே?மெதுவாக நிதானமாகப் பொறுப்புடனும் பொறுமையுடனும் கையாளப் படும் குழந்தைகளே தைர்யமாக சுயபுத்தியுடன் முழு ஒழுக்கத்துடன் நாளைய உலகை வழித்துவார்கள் என்பதே மாண்டிசொரியின் அனுபவம்.என் அனுபவமும் அதுவே!!!
*அடுத்த கட்டுரையில் மாண்டிசொரி வகுப்பறைக்குத் தேவையான முக்கிய அமைப்பு முறைகள்,மாணவர்களைக் கையாளும் சில வழிமுறைகள் போன்ற விஷயங்களைக் காணலாம்.நன்றி!

.